ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2342/08 - 2023 ජූලි මස 24 වැනි සඳුදා - 2023.07.24

*2342/08 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகிய நான் (2 ஆவது அத்தியாயம்) விளக்க கட்டளையின் 18 ஆவது பிரிவுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய, 1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் ஊடாக எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், ஓபநாயக நீர் வழங்கல் திட்டத்தின் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையாகவுள்ள இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதற்குரிய இலக்கம் 2274/ 04 மற்றும் 2021, ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டளையை இக்கட்டளையின் ஊடாக இரத்துச் செய்கின்றேன்.*

**ஜீவன் தொண்டமான்,**
*நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு*
*வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்.*

தொடர்பு இல.: DVP/02/04/RN/502.
*நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு*
*வசதிகள் அபிவிருத்தி அமைச்சு,*
*இல. 35, "லக்திய மெதுர",*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2023, யூலை 14.*


*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*இரத்தினபுரி மாவட்டத்தின், ஓபநாயக பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 244-வடக்கு ஹுணுவல கிராம அலுவலர் பிரிவில், 05 ஆம் இலக்க பகுதி, நவ கம்மாநய கிராமத்தில் ஹுணுவலவத்த 05 ஆம் இலக்கப் பகுதி என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து சுமார் 01 ஏக்கர் 80 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய காணிப்பகுதி.*

வடக்கு : கைவிடப்பட்டுள்ள பழைய இறப்பர் தோட்டம் ;
கிழக்கு : கைவிடப்பட்டுள்ள பழைய இறப்பர் தோட்டம் ;
தெற்கு : கைவிடப்பட்டுள்ள பழைய இறப்பர் தோட்டம் ;
மேற்கு : கைவிடப்பட்டுள்ள பழைய இறப்பர் தோட்டம்.

*காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயரும் முகவரியும் :* கஹவத்த பெருந்தோட்ட நிறுவனம்,
இலக்கம் 111, நீர்கொழும்பு வீதி,
பேலியகொடை.

EOG 07-0225